1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. ஆலடி அருணா சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாற்றில் சார்பு நீதிமன்றம் (சப்-கோர்ட்) ஏற்படுத்த அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 154, மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. கே. சுப்பராயன், திரு. ச. அழகுவேலு மற்றும் திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

154--

ஆயுள் தண்டனைக் கைதிகள்

319*-திரு. கே. சுப்பராயன்:**

திரு. ச. அழகுவேலு:

திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களை விடுதலை செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஆயுள் தண்டனைக் கைதிகளின் எண்ணிக்கை 432.

(ஆ) அவர்களை விடுதலை செய்யும் திட்டம்/செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

[*1996 ஆகஸ்ட் 10*

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வினாடிப் பொழுதில் ஏற்பட்டுவிட்ட ஆவேசத்தில் கொலைக் குற்றத்திற்கு ஆளான அந்த சிறைவாசிகள் பத்தாண்டுக் காலம் சிறையில் இருந்தது போதும் என்ற அடிப்படையிலும், கருணையின் அடிப்படையிலும் அவர்களை விடுவிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்பது இன்றைய நாகரீக உலகில் பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகின்ற கோரிக்கையாகும். எனவே, நான் இந்த அரசுக்கு விண்ணப்பித்துக் கொள்வது, பத்தாண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் அனைவரையும் விடுவிப்பது என்று நமது மாநில அரசு முடிவை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அதே மன இயல்போடு இந்த அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றது.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கூறிய அந்தக் கருத்தை நானும் வலியுறுத்துகின்றேன். அதேநேரத்தில் மணிமேகலை பிறந்த மண் இது. சிறைச்சாலைகளையெல்லாம் அறச்சாலைகளாய் மாற்றிய இந்த மண்ணில், பேரறிஞர் அண்ணா பிறந்த தினமும் மற்றும் இந்திய விடுதலை நாளும் விரைவில் வருகின்ற இந்த நேரத்தில், கனிவோடு இந்தப் பிரச்சினையை அணுகி, 10 ஆண்டுகள் சிறைச்சாலையில் அவர்கள் இருந்திருந்தால் அவர்கள் அனுபவித்த கொடுமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களை விடுதலை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை நாள் என்பது இன்னும் இரண்டொரு நாட்களுக்குப் பின்னர் வந்து விடுகின்றது. எனவே அவ்வளவு விரைவில் பரிசீலனை முடிவடையாது என்று கருதுகிறேன். அண்ணா அவர்கள் பிறந்த நாள் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். எனவே, அதுபற்றி ஆய்வு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

1996 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில் கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறைச்சாலை வாழ்வு பற்றி தொடர்ந்து கட்டுரை எழுதுகின்ற தியாகு போன்றவர்கள், அதுபற்றி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தினுடைய சாராம்சமும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் எழுப்பிய கேள்வியும், மற்றும் ஆளுங்கட்சித் தரப்பிலே எழுப்பப்பட்ட இந்தக் கேள்விகளும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அண்ணா அவர்கள் பிறந்த நாளில் இது சாத்தியமா என்பதை அரசு யோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 155, வேடசந்தூர் தொகுதி உறுப்பினர் திரு. சி.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

155--

மோர்ப்பட்டியில் நியாயவிலைக் கடை அமைத்தல்

*283--**திரு. சி.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வடமதுரை ஒன்றியம், மோர்ப்பட்டியில் இயங்கி வந்த நியாயவிலைக் கடை வேறு ஊருக்கு மாற்றப்பட்டு விட்டதால், மீண்டும் இங்கு புதிய நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேடசந்தூர் பகுதியில் இருக்கிற மோர்ப்பட்டியில் நியாய விலைக்கடை 17-6-1978-ல் துவக்கப்பட்டது. இந்தக் கடையை நடத்தும் வி. மேட்டுப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு